

புதுச்சேரி மற்றும் தமிழகம்

மாலை எக்ஸ்பிரஸ்

MAALAI EXPRESS

மாலை நாளிதழ்

மாநிலம் பயனுற!

# உலக சுற்றுச்சூழல் தினம்



**புதுச்சேரி, ஜூன் 4-**

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு புதுச்சேரி அரசு வனத்துறை, சுற்றுலாத் துறை, சுற்றுச்சூழல் மற்றும் அறிவியல் தொழில் நுட்பத் துறை இணைந்து ஏற்பாடு செய்த புதுச்சேரி முருங்கப்பாக்கம் கைவினை கண்காட்சியம் அருகில் உள்ள மாங்ரோஸ் காட்டில் சிதறி கிடந்த பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றும் பணியை அரியாங்குப்பம் எம்எல்ஏ பாஸ்கர் (எ) தஷ்ணாமூர்த்தி அதிகாரிகள் முன்னிலையில் தொடங்கி வைத்தார்கள். இதில் துறை சார்ந்த அரசு அதிகாரிகள், சமூக அமைப்பு தன்னார்வளர்களுடன் பூரணாங்குப்பம் தனசுந்தராம்பாள் சாரி டேபுள் சொசைட்டி (DSC-society) தன்னார்வலர்கள் 15 நபர்கள் கலந்து கொண்டனர். இதில் சுமார் 100 கிலோவிற்கு அதிகமாக பிளாஸ்டிக் பொருட்கள் அனைத்து தன்னார்வலர்களால் சுத்தம் செய்யப்பட்டது.